- மக்கள் பணிகளை அரசு ஊழியர்கள் செய்கின்றனர்.
- உழவர்கள், தொழிலாளர்கள், முதலீட்டாளர்கள், பணியாளர்கள் பணியாற்றி வருவாயை ஈட்டுகின்றனர். இது ஒட்டு மொத்தமாக நாட்டு வருவாய் என்கிறோம்.
- தனியாக ஒருவருக்கு மட்டும் கிடைக்கும் வருமானத்தைத் தனிநபர் வருமானம் என்கிறோம்.
- உற்பத்தி, நுகர்ச்சி, பகிர்வு ஆகிய மூன்றும் பொருளாதாரத்தின் அடிப்படைகளாக அமைகிறது.
- வாங்குவதும், விற்பதும் நடைபெறும் இடம் சந்தை எனப்படும்.
- மக்கள் சந்தையில் பொருட்களை வாங்கித் தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதையே நுகர்ச்சி என்கிறோம்.
- சில பொருட்கள் அதிகமாக குவியும்போது அப்பொருளின் விலை குறைந்தும், பற்றாக்குறை ஏற்படும்போது விலை அதிகரித்தும் காணப்படும்.
- அத்தியாவசிய பொருட்களை அரசு நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்குகிறது.
- பொருளாதார வளர்ச்சி என்பது உற்பத்தி, நுகர்வு, பகிர்வு பெருகிக்கொண்டே செல்வத்தைக் குறிக்கம்.
- என்ன உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? என்பதை அரசு முடிவு செய்யும்.
- மத்திய மாநில அரசுகள் வரவு செலவுத்திட்டத்தை தயாரிக்க பொருளாதார அறிவு அவசியம்.
- பொருளாதார அறிவு அனைத்து துறைகளின் முன்னேற்றத்திற்கு அவசியாகிறது.
- நமது நாட்டில் பொருளாதாரத்திற்காக அறிஞர் அமர்த்தியாசென் நோபல் பரிசினைப் பெற்றுள்ளார்.

## ஏழாம் வகுப்பு

### உற்பத்திக் காரணிகள்

- பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல்
- மனித விருப்பங்களைப் பற்றியும் அவை நிறைவு செய்யப்படுவது பற்றியும் விளக்குகிறது.

பொருளியல் அறிஞர்கள்:-

- ஆடம்ஸ்மித் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- அவர் தனது நூலான (1776) "நாடுகளின் செல்வம்" என்பதில் பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஒரு அறிவியல்" என வரையறை செய்கிறார்.
- இவரது புத்தக வெளியீட்டிற்கு பின்னரே பொருளியல் ஒரு முறைப்படுத்தப்பட்ட அறிவியலாக அறியப்பட்டது.

- இலயனல் ராபின்ஸ் அவர்கள் "பொருளியல் என்பது பற்றாக்குறையான வளங்களோடு மனித நடவடிக்கைகளைப் பற்றி பயிலுகின்ற அறிவியல் என்பதைக் குறிக்கும்" என்கிறார்.

உற்பத்திக்காரணிகள் :-

| வ.எண் | உற்பத்திக் காரணிகள் | வெகுமதிகள் | தன்மை |
|---|---|---|---|
| 1 | நிலம் | வாரம் | அடிப்படை உற்பத்திக்காரணிகள் அல்லது உண்மைக் காரணிகள் |
| 2 | உழைப்பு | கூலி | |
| 3 | மூலதனம் | வட்டி | பெறப்பட்ட உற்பத்திக் காரணிகள் அல்லது தருவிக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் |
| 4 | தொழிலமைப்பு | இலாபம் | |

1. நிலம்:-

- பொருளியலில் நிலம் என்பது மனிதனால் உருவாக்கப்படாத அனைத்தும் நிலமாகும்.
- காற்று, சூரிய ஒளி, பூமி, காடுகள், ஆறுகள் மற்றும் கனிம வளங்கள் ஆகிய அனைத்தும் நிலம் எனப்படும்.

பண்புகள்:-

- நிலம் இயற்கையின் கொடை ஆகும்.
- நிலத்தின் அளிப்பு நிலையானது.
- நிலத்தை அழிக்க முடியாது.
  நிலம் செழிப்பில் வேறுபாடும்.
- நிலம் செய்யப்படும் உற்பத்திக்காரணி

2. உழைப்பு:-

- ஊதியம் பெறுவதற்காக உடல் உழைப்பு அல்லது மன உழைப்பினை மேற்கொள்வதைக் குறிக்கும்

பண்பகள்:-

- உழைப்பு அழியக்கூடியது.
- உழைப்பு மனிதனுக்கு மனிதன் மாறுபடும்.

- உழைப்பு இடம் பெயரக்கூடியது.
- தனி உழைப்பாளிகளின் பேரம் பேசும் ஆற்றல் குறைவு.

வேலை பகுப்பு முறை:-

- ஆடம் ஸ்மித் தனது நூலான "நாடுகளின் செல்வம்" என்பதில் வேலைப் பகுப்புமுறையை அறிமுகப்படுத்தினார்.
- வேலைப்பகுப்பு என்பது ஒரு வேலையை பல்வேறு குழுக்களிடம் பகிர்ந்தளித்தலைக் குறிக்கும்.
- ஆடம் ஸ்மித் குண்டூசி தயரிப்பை 18 உட்பிரிவாக பிரித்து விளக்கியுள்ளார்.
- 10-மனிதர்கள் ஒரு நாளைக்கு 48,000 ஊசிகள் உற்பத்தி செய்யமுடியும் எனவும் ஒரு நபருக்கு 4800 வீதம் உற்பத்தி செய்ய இயலும்.
- வேலைபகுப்பு இல்லை எனில் ஒரு நபர் ஒரு குண்டூசி மட்டும் செய்ய முடியும் என்கிறார்.

3. மூலதனம்:-

- பொதுவாக மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும்.
- பொருளியலில் மூலதனம் என்பது செல்வத்தை மேலும் உற்பத்தி செய்திட மனித முயற்சியால் உருவாக்கப்பட்ட செல்வத்தைக் குறிக்கும்.

மூலதனத்தின் வகைகள்:-

- பருமப்பொருள் மூலதனம் (கட்டிங்கள் மற்றும் இயந்திரங்கள் போன்றவை)
- பண மூலதனம் (பணம், பத்திரங்கள் போன்றவை)
- மனித மூலதனம் (கல்வி, பயிற்சி போன்றவை)

மூலதனத்தின் பண்புகள்:-

- மூலதனம் ஒரு செயலற்ற உற்பத்திக் காரணி.
- மூலதனம் மனித முயற்சியால் உருவாக்கப்பட்டது.
- மூலதனம் ஆக்கமுடையது.
- மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்.
- மூலதனம் அதிக இயங்கும் தன்மை கொண்டது.

4. தொழிலமைப்பு:-

- நிலம், உழைப்பு, மூலதனம் ஆகிய உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்து இடர்பாடுகளை ஏற்கும் காரணி "தொழிலமைப்பு" ஆகும்.

தொழில் முனைவோர்:-

- அனைத்து உற்பத்தி, காரணிகளையும் ஒருங்கிணைத்து இடர்பாடுகளையும் நிச்சயமற்ற தன்மைகளையும் எதிர் கொள்பவரே தொழில்முனைவோர் ஆவார்.

- இவர் "சமுதாய மாற்றும் காணும் முகவர்" என அழைக்கப்படுகிறார்.

பலவகைதுறைகள்:-

1.முதன்மைத் துறை:-

- முதன்மைத்துறை இயற்கைப் பொருட்களை முதன்மைப் பொருள்களாக மாற்றுகின்றது.
- விவசாயம், மீண்பிடித்தல், வனத்துறை, சுரங்கத்தொழில் போன்றவை அடங்கும்.
- இந்தியாவில் விவசாயத் தொழில் அதிகமானதாகவும், முக்கியமானதாகவும் விளங்குகிறது.

2. இரண்டாம் துறை:-

- இரண்டாம் துறை என்பது மூலப்பொருட்களை உற்பத்திப் பொருட்களாக மாற்றுகிறது.
- சிறு மற்றும் பெருந் தொழில்கள், கட்டுமானம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி இதில் அடங்கும்.

3. சார்புதுறை:-

- சார்புத்துறை என்பது சேவைத்துறை ஆகும்.
- இதில் வணிகம், வங்கிகள்,போக்குவரத்து, கல்வி, மருத்துவம், பண்பாடு ஆகியவை அடங்கும்.
- பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் இத்துறையில் அதிக தொழிலாளர்கள் பணி செய்கின்றனர்.
- அமெரிக்காவில் 80 சதவீதம் பேர் இத்துறையில் பணிபுரிகின்றனர்.

## எட்டாம் வகுப்பு

### பணம், சேமிப்பு மற்றும் முதலீடு

- பண்டைக் காலத்தில் ஒரு பொருளுக்கு மாற்றாக இன்னொரு பொருளைப் பெற்றுக் கொண்டார்கள்.
- இது பண்டமாற்றுமுறை எனப்பட்டது.
- இதில் ஏற்பட்ட இடர்பாட்டின் விளைவாக பணத்தை இடையீட்டுக் கருவியாக கண்டுபிடிக்க உதவியது.

பணம் என்பது:-

- வாக்கர் அவர்களது கூற்றுப்படி, "பணம் மட்டுமே பணத்தின் தேவையை சந்திக்கும்". என்றும் "பணம் எதையெல்லாம் செய்ய

வல்லதோ அதுவே பணம்" எனவும் வரையறை செய்கிறார்.

பணத்தின் பெயர் காரணம்:-

- இலத்தீன் மொழியில் பணத்திற்குட'மானட்டா' என்பது பெயராகும்.
- மானட்டா என்பது உரோமனியபெண் கடவுள்ஜினடோவின் மறுபெயர்ஆகும்.
- பணத்தின் ஆங்கில வார்த்தை மானட்டாவிலிருந்து மருவியதாகும்.
- பணம் என்பது காசுகள், ரூபாய் நோட்டுகள், காசோலை, செலுத்தச் சீட்டு, கடன் அட்டை முதலியவை இணைந்த ஒன்றாகும்.

பணத்தின் மதீப்பிடு:-

- பணத்தின் மதிப்பீடு என்பது மக்களின் நுகர்வத்திறனை அடிப்படையாக கொண்டுள்ளது.
- மக்களின் நுகர்வு திறன் என்பது பொருளின் விலையைச் சார்ந்துள்ளது.
- பணம் ஒரு கருவி மட்டுமே அதுவே இறுநிலை அல்ல.

பணத்தின் பணிகள்:-

- இடையீட்டுக் கருவி (பொருட்கள் பரிமாற்றம்)
- மதிப்பின் அளவுகோல். (பொருளின் விலை (மதிப்பு)
- மதிப்பின் நிலைகளன். (சேமித்து வைக்க)
- எதிர்கால செலுத்துகை.(கடனை எதிர்காலத்தில் செலுத்துவது)

பணத்தின் முக்கியத்துவம்:-

- பொருளியல் செயல்பாடுகளான நுகர்வு, உற்பத்தி, பகிர்வு, பரிமாற்றம் மற்றும் பொது நிதியல் ஆகியவற்றில் பணத்தின் பங்களிப்பு முக்கியமானது ஆகும்.

சேமிப்பு மற்றும் முதலீடு:-

- சேமிப்பு என்பது வருமானத்தில் செலவழிக்கப்படாமல் உள்ள பணத்தைக் குறிக்கும்.
- முதலீடு என்பது சேமிக்கப்பட்டவற்றை உற்பத்தியில் ஈடுபடுத்துவதைக் குறிக்கும்.
- பொருளாதார முன்னேற்றத்திற்கு சேமிப்பும் முதலன ஆக்கமும் இன்றியமையாதது ஆகும்.
- சேமிப்பு என்பது நுகர்வோர் கரங்களிலிலும், முதலீடு என்பது தொழிலதிபர்கள் கரங்களிலும் உள்ளன.

## 9-ம் வகுப்பு

1.தேவையும் அளிப்பும்

தேவை என்பது:-

- தேவை என்பது விருப்பமே. பொருளியலில் தேவை என்பது வாங்கும் சக்தியுடன் கூடிய விருப்பத்தைக் குறிக்கும்.
- தேவை என்பது பொருட்களை வாங்கும் மக்களிடம் எழுவதாகும். அவர்கள் நுகர்வோர் எனப்படுகிறார்கள்

தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள்:-

விலைதான் தேவையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும். இது தவி நுகர்வோரின் சுவைகளும் மற்றும் விருப்பங்கங்களும்.

2.பதிலீட்டுப் பண்டத்தின் விலை.
3.நுகர்வோரின் எண்ணிக்கை
4.வருங்கால விலைப்பற்றிய எதிர்பார்ப்பு
5.வருமான பகிர்வு,
6.பருவகால மாற்றங்கள்.

தேவை விதி:-

- ஆல்பிரடு மார்ஷல் தேவை விதியை வரையறை செய்கிறார்.
- விலை உயர்த்தால் தேவை குறையும், விலை குறைந்தால் தேவை அதிகரிக்கும்.
- விலைக்கும் தேவைக்கும் தலைகீழ் தொடர்பு உடையது.
- தேவை அட்டவணை விலைக்கம் தேவைக்கும் உள்ள தலைகீழ் தொடர்பை விளக்குகிறது.
- தேவை அட்டவணை நுகர்வோர் பல்வேறு விலைகளில் வாங்கும் அளவினைக் குறிக்கிறது.

தேவை விதிவிலக்கு:-

- தேவை விதியிலிருந்து மாறுபட்டு விலை உயரும் போது தேவையும் உயரும் (எ.கா. வைர ஆபரணங்கள் (வெப்ளன் விளைவு)
- விலை குறையும்போது தேவையும் குறையும். (எ.கா.கேழ்வரகு (கிப்பன் விளைவு).
- இது தேவை விதிவிலக்கு எனப்படுகிறது.

அளிப்பு என்பது:-

- அளிப்பு உற்பத்தியாளர்களிடமிருந்து எழுகிறது.

- ஒரு குறிப்பிட்ட விலையில் விற்பனைக்கு அளிக்கப்படும் பண்டத்தின் அளவு அளிப்பு எனப்படும்.

அளிப்பைத் தீர்மானிக்கம் காரணிகள்:-

விலை அளிப்பை தீர்மானிக்கும் முக்கிய காரணிகள்.

- உற்பத்தித் தொழில் நுட்பம்.
- காரணிகளின் விலை
- பிற பண்டங்களின் எண்ணிக்கை
- வருங்கால விலை பற்றிய எதிர்பார்ப்பு.
- வரிகள் மற்றும் சலுகைகள்.
- பொருளாதாரம் சாரா காரணிகள்.

அளிப்பு விதி:-

- விலை உயர்த்தால் அளிப்பும் உயரும், விலை குறைந்தால் அளிப்பும் குறையும்.
- விலைக்கும் அளிப்பிற்கும் நேரடி தொடர்பு உள்ளது.

## 2.சமநிலை விலை

சமநிலை விலை என்பது:-

- ஒரு குறிப்பிட்ட விலையில், வாங்கப்படும் அளவும், விற்கப்படும் அளவும் சமமாகும்.
- அவ்விலை சமநிலை விலை எனப்படும்.

சமநிலை விலையின் காலத்தின் பங்கு:-

- ஆல்பிரட் மார்ஷல் சமநிலை விலை நிர்ணயத்தில் மூன்று வகையான காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியுள்ளார்.

1. அங்காடிக் காலம் அல்லது மிகக் குறுகிய காலம்:-

- இது தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை மாற்ற முடியாத காலம்.
- இதில் அளிப்பு மாறாது.
- தேவையே விலையைத் தீர்மானிக்கும்.

2. குறுகிய காலம்:-

- தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை ஓரளவு மாற்றக்கூடிய காலம்.
- தேவை உயர்வு சிறிய விலை குறைவையையும் ஏற்படுத்தும்.

3. நீண்டகாலம்:-


Coaching for TNPSC/IBPS/TRB/TET/VAO

- தேவை மாற்றத்தை முழுமையாக அளிப்பு மாற்றத்தால் சந்திக்க முடியும்.
- விலை தேவையும், அளிப்பும் தீர்மானிக்கும்.

# பத்தாம் வகுப்பு

## 1.நாட்டு வருமானம்

நாட்டு வருமானம் என்பது:

- நாட்டு வருமானம் என்பது, "ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவே ஆகும்".
- நாட்டு வருமானம் ஒரு நாட்டின் மொத்த வருமானத்தைக் குறிக்கும்.

அடிப்படைக் கருத்துக்கள்:-

1. மொத்த நாட்டு உற்பத்தி (GNP-GROSS NATIONAL PRODUCT)
   - ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பும், அந்நாட்டு மக்கள் ஓராண்டில் ஈட்டிய வருமானமும், வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் இலாபமும் சேர்த்ததே மொத்த நாட்டு உற்பத்தியாகும்."
2. மொத்த உள்ளநாட்டு உற்பத்தி (GDP-GROSS DMESTIC PRODUCT):
   - ஒரு நாட்டின் எல்லைக்குள் ஓர் ஆண்டில் அந்நாட்டிற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றம் பணிகளின் மொத்த மதிப்பைக் குறிக்கும்.
3. நிகர நாட்டு உற்பத்தி (NNP- NET NATIONAL PRODUCT):

| | | |
|---|---|---|
| நிகர நாட்டு உற்பத்தி | = | மொத்த நாட்டு உற்பத்தி- தேய்மானச் செலவு |

4. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP–NET DOMESTIC PRODUCT):

| | | |
|---|---|---|
| நிகர உள்நாட்டு உற்பத்தி | = | மொத்த உள்நாட்டு உற்பத்தி - தேய்மானச் செலவு |

5.தலா வருமான (Percapita Income)

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

நாடுகளின் தலா வருமானம் ஒப்பீடு:-



Padasalai

| நாட்டின் பெயர் | தலா வருமானம் (அமெரிக்க டாலரில்) |
|---|---|
| ஜப்பன் | 47490 |
| அமெரிக்கா | 46020 |
| இந்தியா | 950 |
| வங்காளதேசம் | 470 |

நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகள்:-

- நாட்டு வருமானத்தை கீழ்காணும் மூன்று முறைகளில் கணக்கிடலாம்.
- உற்பத்தி முறை (நாட்டின் மொத்த உற்பத்தியின் அடிப்படையில்)
- வருமான முறை (நாட்டின் அனைத்து மக்களின் வருமானங்களின் அடிப்படையில்)
- செலவின் முறை (நாட்டின் மொத்த நுகர்வு, முதலீடுச் செலவு மற்றும் சேமிப்பு)
- இந்தியாவில் உற்பத்திமுறை மற்றும் வருமான முறை அடிப்படையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

Padasalai

நாட்டு வருமானக்கணக்கீட்ன்போது காணப்படும் பிரச்சினைகள்:-

- கருப்பபணம்.
- புணம்சாரா பொருளாதாரம் (பண்டமாற்று பொருளாதாரம்)
- இருமுறை கணக்கிடுதல்.
- நம்பத்தகுந்த புள்ளி விவரங்கள் இன்மை.
- இல்லத்தரசிகளின் பணிகள்.
- சமூகப்பணிகளை கணக்கில் கொள்ளாமை.

இந்தியாவில் நாட்டு வருமானத்தின் போக்கு:-

| ஆண்டு | விழுக்காடு |
|---|---|
| 2003 | 4.3% |
| 2004 | 8.3% |
| 2005 | 6.2% |

| | |
|---|---|
| 2006 | 8.4% |
| 2007 | 9.2% |
| 2008 | 9% |
| 2009 | 7.4% |

இந்திய நாட்டு வருமானத்தில்

துறைகளின் பங்களிப்பு:-

| துறைகள் | விழுக்காடு |
|---|---|
| முதன்மைத் துறை | 15.8 |
| இரண்டாம் துறை | 25.8 |
| பணிகள் துறை | 58.4 |

Padasalai

பொருளாதார முன்னேற்றத்தில் அரசின் பங்கு:-

- பழங்காலங்ளில்அரசின் தலையிடாக் கொள்கை (டுயளைளநண-கயசைந) நடைமுறையில் இருந்தது.
- பழங்கால அரசுகள் காவல் அரசகளாக (நாட்டு பாதுகாப்பு) மட்டுமே இருந்தது.
- நவீன அரசுகள் மக்கள் நல அரசுகளாக உள்ளது.
- அரசின் பணிகள்:-
- நாட்டை பாதுகாத்தல்.
- நிர்வாகப் பணிகள்(மாக்கள் பணியாற்ற சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை
- ஆகிய மூன்றும் அரசின் முக்க அலகாகச் செயல்படுகிறது)
- சமூகப்பாதுகாப்பு பணிகள் (உடல் நலம் மற்றும் வேலையின்மை நிவாரணம்)
- பொருளாதாரப் பணிகள்.

## 2. விடுதலைக்கப்பின் இந்தியப் பொருளாதாரம்

பிரிட்டிஷ்" ஆட்சியில் இந்தியாவின் பொருளாதார நிலை:-

- இந்தியப் பொருளாதாரம் கிராமப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- 70 சதவீத மக்கள் வேளாண்மையை சார்ந்திருந்தனர்.
- இந்தியாவில் வணிகம் மற்றும் தொழில் நகரங்களை மையமாக கொண்டு செயல்பட்டன.
- இந்தியாவில் முக்கியத் தொழிலாக ஜவுளித் தொழில் காணப்பட்டது.
- கைவினைப்பொருட்கள் உற்பத்தியில் தலை சிறந்து விளங்கியது.

6) புகழ்பெற்று விளங்கிய உற்பத்திகள்:-

| உற்பத்திகள் | நகரங்கள் |
|---|---|
| காளிகோ துணிகள் | வங்காளம் |
| பட்டு நெசவு | பெனாரஸ் |
| கைத்தறி | தமிழ்நாடு |
| சால்வை | காஷ்மீர் |
| மரத்திலான பொருட்கள் | லூதியானா |

Padasalai

பிரிட்டிஷ்" ஆட்சியின் முக்கிய விளைவுகள்:-

- கிராமப் பொருளாதாரத்தின் விழ்ச்சி.
- கைவினைப் பொருட்களின் புகழ் மங்கியது.
- புதிய நில அமைப்பு முறை (ஒருங்கிணைந்த இந்தியா)

விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரம்:-

- ஜவகர்லால்நேரு கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்த விரும்பினார்.
- விசாயம், நீர்ப்பாசனம் மற்றும் மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- கலப்பு பொருளாதாரத்தை நடைமுறைப் படுத்தினனர்.
- பொருளாதாரத்தை நடைமுறைப் படுத்தினர்.
- இந்திய ஐந்தாண்டுத் திட்டம் ரஷ்யாவின் 7-ஆண்டு திட்டத்திலிருந்து வந்தது.
- 1950-ம் ஆண்டு இந்திய திட்டக்குழு ஆரம்பிக்கப்பட்டது.
- தேசிய வளர்ச்சிக்குழு (NDC) மாநில அரசின் ஒத்துழைப்பை 5-ஆண்டுதிட்டங்களுக்கு பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

- (NDC) - தலைவர் பிரதமர் ஆவார். நாட்டின் அனைத்து முதல்வர்களும் உறுப்பினராவர்.
- 2007-2012-ல் 11-வது ஐந்தாண்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- தற்போது 12-வது ஐந்தாண்டுத்திட்டம் (2012-2017) நடைமுறையில் உள்ளது.

இந்திய வேளாண்மை:-

- நமது நாட்டின் முதுகெலும்பாக வேளாண்மை திகழ்கிறது.
- நாட்டின் வருவாயின் வேளாண்மையின் பங்கு 40 சதவீதமாக உள்ளது.
- 1967-ல் இந்தியாவில் பசுமைப்புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- பசுமைப் புரட்சி என்பது நிலச்சீர்திருத்தம், வீரிய வித்துக்கள் பயன்பாடு மற்றும் மேம்பாடுத்தப்பட்ட பாசன வசதியைக் குறிக்கும்.
- நிலச்சீர்திருத்தம் என்பது இடைத்தரகர்களை ஒழித்து நில உச்சவரம்பினை நிர்ணயித்தலைக் குறிக்கும்.
- பூமிதான இயக்கத்தை ஆரம்பித்தவர் ஆச்சார்ய வினோபாவே.
- பசுமைப்புரட்சி கோதுமை மற்றும் அரிசி போன்றவற்றில் ஏற்பட்டு இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது.
- இந்தியாவில் வீரிய விதைகள் சார்ந்து லூதியானா, பந்த்நகர் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி செய்தன.

இந்திய தொழில்துறை:-

- பொதுத்துறை நிறுவனங்கள் என்பது அரசால் நடத்தப்படுவது.
- இந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனம், சிந்திரி உரத்தொழிற்சாலை, பெரம்பூர் ரயில்பெட்டி தொழிற்சாலை போன்றவை பொதுத்துறை நிறுவனங்களாகும்.

பொருளாதார சீர்திருத்தங்கள் 1991:-

- இந்தியப் பொருளாதாரத்தில் 1991- மிக முக்கியமான ஆண்டாகும்.
- 1991-ல் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.
- பொருளாதார சீதிருத்தங்களின் காரணமாக இந்தியாவில் அந்நிய முதலீடு அதிகரித்தது.
- பன்னாட்டு நிறுவனம் என்பது பல நாடுகளில் நிறுவனங்களை தொடங்கியுள்ளவை ஆகும்.
- குடிசைத் தொழில் என்பது குடும்ப உறுப்பினர்களால் பழமையான உற்பத்தி முறையில் செய்யும் தொழிலாகும்.
- சிறு தொழில் என்பது பெரிய தொழில் நிறுவனங்களைச் சார்ந்த ஒன்றாகும்.
- பொருளாதார சீர்திருத்தம்-தாராளமயமாதல், தனியார்மயமாதல், உலகமயமாதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- தாராளமயமாதல் என்பது தனியார் தொழில் நிறுவனங்களுடன் தனியார் துறையையும் அனுமதிப்பது போன்றவை.

- தனியார்மயமாதல் என்பது பொதுத்துறையை தனியாரிடம் ஒப்படைப்பதைக் குறிக்கும்.
- உலகமயமாதல் என்பது ஒரு நாட்டின் அங்காடியை பன்னாட்டு அங்காடியுடன் தொடர்படுத்துவதைக் குறிக்கும்.

இந்திய அறிவியல்:-

- மின் உற்பத்திக்கு அனுமின்சக்தி தேவை என்பதை 1954-ற்கு முன்னரே அரசு அறிந்தது.
- இந்தியாவில் முதல் அனுசக்தி நிலையம் 1956-ல் டிராம்பேவில் துவங்கப்பட்டது.
- விண்வெளியில் செயற்கைக் கோள்களை செலுத்தும் 6-நாடுகளில் இந்தியாவும் ஒன்று. செயற்கைக்கோள் மற்றும் தொலைதொடர்பு ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பொறுப்புவகிக்கும் நிறுவனம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாகும். பெங்களூரில் தலைமையகம் உள்ளது.
- இந்தியாவில் 1975-ம் ஆண்டு ஆர்யபட்டா என்கிற செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டது.
- கடந்த 40-ஆண்டுகளில் 50 செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக ஏவப்பட்டுள்ளது.
- 2008-ல் சந்திராயன்-1 விண்கலம் நிலவிற்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.
- உயிரி தொழில் நுட்பத்தின் வாயிலாக காலராவிற்கு வாய்மொழி தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது.
- தொலை தொடர்பு வசதிகளைஅளிப்பதில் இந்தியா உலக நாடுகளிடையே 10-வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவில் 77.93 மில்லியன் தொலைபேசி தொடர்பகளும், 1.79 மில்லியன் பொது தொலைபேசி நிலையங்களும் உள்ளன்.
- இந்தியாவில் 65.2 கோடி பைபேசி பயன்பாட்டாளர்கள் உள்ளனர். மாதந்தோறும் 1 மில்லியன் கைபேசிகள் பெறப்படுகிறது.
- பெங்ளூர், ஹைதராபாத் மற்றும் சென்னை முக்கிய தகவல் தொழில் நுட்ப மையங்களாகும்.

இந்தியாவில் கல்வி வளர்ச்சி:-

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் | அதிக விழுக்காடு | குறைந்த விழுக்காடு | தமிழ்நாடு |
|---|---|---|---|---|---|---|
| 2011 | 82.14% | 65.46% | 74.04% | கேரளா | பீகார் | 80.3% |
| | | | | 93.9% | 63.8% | |

- இந்தியாவில் மொத்தம் கல்வி கற்றோர் எண்ணிக்கை 778.45 மில்லியன்களாகும்.

- இந்தியாவில் தொடக்கப்பள்ளிகளில் 80மூ அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளாக உள்ளன.
- 14 வயதிற்குட்பட்டட அனைவருக்கும் இலவச கட்டாயக்கல்வி 2009-ம் ஆண்டு சட்டத்தின்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
- மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் மற்றும் SSA (அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்) மூலம் மாணவர் சேர்க்கை தொடக்கக் கல்வியில் அதிகரிகத்துள்ளது.
- 14 முதல் 18 வயது வரையிலான மாணவர்கள் பயிலும் இடைநிலைக் கல்வியில் 88.5 மில்லியன் மாணவர்கள் கற்று வருகிறார்கள்.
- இடைநிலை கல்வி மேம்பாட்டிற்காக அனைவருக்கம் இடைநிலைக் கல்வி (RMSA-Rashtriya Madhyamik Shiksha Abhiyan) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- உயர்கல்வி வழங்குவதில் சினா மற்றம் அமெரிக்காவிற்குபின் இந்தியா 3-வது இடத்தில் உள்ளது.
- உயர்கல்வி வழங்குவதில்பல்கலைக் கழக மானியக் குழு முக்கிய பங்காற்றுகிறது.
- 2009-ம் ஆண்டிவரை 20-மத்திய பல்கலைக் கழகம்,215-மாநில பல்கலைக்கழகம், 100-நிகர்நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் 13-தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களும் உள்ளன.
- 1600-ம் கல்லூரிகளும், பெண்களுக்கென 1800-கல்லூரிகளும் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி:-

- தமிழ்நாட்டின் தொடக்க கல்வி முன்னேற்றத்திற்கு முன்னாள் முதல்வர் க.காமராசரே முக்கிய காரணமானவர் ஆவார்.
- பள்ளிகளில் வாரத்தில் 5-நாட்கள் முட்டை வழங்கப்படுகிறது.
- தமிழ்நாட்டில் 30 ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.
- உயர்கல்வி வழங்குவதில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலமாக உள்ளது.
- 2020-ம் ஆண்டிற்குள் உயர்கல்வியினை 11.72 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக்குவதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

## தமிழ்நாட்டில் மின் உற்பத்தி:-

| அனல்மின் நிலையங்கள் | நீர்மின் நிலையங்கள் | அனுமின் நிலையங்கள் | காற்றுமின் நிலையங்கள் (மரபுசாரா) | உயிரி பொருட்கள் எரிசக்தி |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| எண்டனூர்<br>துத்துக்குடி<br>நெய்வேலி<br>மேட்டூர் | மேட்டூர் குந்தா<br>பெரியார் அணை<br>கோதையாறு<br>பைக்காரா<br>சிங்காரா மாயார் | கால்பாக்கம்<br>கூடன்குளம் | கோயம்புத்தூர்<br>கன்னியாகமரி<br>தூத்துக்குடி<br>திருநெல்வேலி<br>இராமநாதபுரம் | தருமபுரி<br>நாமக்கல் |

- உயிரி பொருட்கள் எரிசக்தியானது வேளாண்பொருட்களின் கழிவிலிருந்து பெறப்படுகிறது.
- தேசிய அனல்மின் நிலையமும், தமிழ்நாடு மின்சார வாரியமும் திருவள்ளுர் மாவட்டம் வல்லூரில் அனல்மின் நிலையம் அமைத்துள்ளது.

தமிழ்நாடு-போக்குவரத்து:-

- சென்னையில் MRTS (Mass Rapid Transit System) மற்றும் பெருநகர ரெயில் திட்டத்தின் மூலம் போக்கவரத்து திட்டங்கள் மேற்பொள்ளப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாட்டின் மிகபெரிய துறைமுகங்கள் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி.
- தமிழ்நாட்டின் மிகச்சிறிய துறைமுகங்கள் கடலூர், நாகப்பட்டினம்.
- விமானநிலையங்கள்-சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம், தூத்துக்குடி.

Padasalai

முந்தைய் TN TET – 2 & TM TET RE – 2 தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்

1. தொழிலங்களை இயக்கும் உயிர்நாடி எனப்படுவது
   A. எரிசக்தி B) போக்குவரத்துC) மூலதனம
   D) மாயணியாட்கள்
2. வெபரின் தொழிலாக அமைவிட கோட்பாடு எந்த அமைப்பை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது?
   A) வட்டம்
   B) சதுரம்
   C) முக்கோணம்
   D) செல்வம்
3. ஒரு நாட்டின் எல்லைக்குள் நிகழ்கின்ற வணிகம்
   A) உள்நாட்டு வணிகம்
   B) ஊரக வணிகம்
   C) பன்னாட்டு வணிகம்
   D) தல வணிகம்

4. தேசிய மக்கள் தொகை கொள்கையை இந்திய அரசாங்கம் அறிவித்த ஆண்டு
   A) பிப்ரவரி, 2000
   B) ஜனவரி, 2001
   C) ஆகஸ்டு, 1999
   D) அக்டோபர், 2002
5. மைய அரசின் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகள்
   A) இராணுவக் கூட வாரியங்கள்
   B) நகர எல்லைப்பகுதி
   C) குறிப்பிட்டஎல்லைப்பகுதி
   D) குழுக்கள் நகரிகம்

6. எந்த ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு இந்தியாவில் நிலையான விலையில் நாட்டு வருமானம் கணக்கிடடப்படுகிறது?
   A) 1993 - 94
   B) 1980 - 81
   C) 1970 -71
   D) 1960 61

1. "பணம் எதையெல்லாம் செய்ய வல்லதோ அதுவெ பணம்" வரையறுத்தவர்
   A) கிரௌத்தர்
   B) இர்லிங்க்பிஷர்
   C) வாக்கர்
   D) சாப்பிரோ
2. தேசிய கல்விக் கொள்கை உருவாக்கப்பட்ட ஆண்டு
   A) 1981
   B) 1986
   C) 1985
   D) 1984
3. வேலைபகுப்பு முறை என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர்
   A) ஆடம்ஸ்த்
   B) ஆல்ப்பிரட்மார்ஷல்
   C) J.M கீன்ஸ்
   D) சாமுவேல்சன்
4. பதினோராம் ஐந்தாண்டுத் திட்டக் காலம்
   A) 2007 - 2012
   B) 2002 -2007
   C) 2012 - 2017

D) 1997 2002

5. பொது மக்களிடம் உள்ள புழக்கப் பணம் என்பது

A)M1

B) M2

C) M3

D) M4

6. இவற்றிற்கிடையே நேரடி உறவு காணப்படுகிறது?

A) விலை மற்றும் தேவை
B) விலை மற்றும்அளிப்பு
C) விலை மற்றும் வருமானம்
D) விலை மற்றும் வரி

7. சமநிலை விலைகீழ்க்கண்டவற்றுள் எத்னை சமன்படுகிறது?

A) தேவை மற்றும் அளிப்பு
B) தேவை மற்றம் வருமானம்
C) அளிப்பு மற்றும் உற்பத்தி
D) தேவை மற்றும் பயன்பாடு

8. சமுதாயம் மாற்றம் காணும் முகவர்

A) நுகர்வோர்
B) தொழில்முனைவோர்
C) உழைப்பாளர்
D) வினியோகஸ்தர்

9. மெதுவான வேலையும், கையூட்டும் கீழ்க்கண்டவற்றுள் எதற்கு காரணமாக விளங்கிறது?

A) உற்பத்தியின் திறமைக் குறைவு
B) வருமானம் மற்றும் செல்வத்தில் எற்றத் தாழ்வு
C) தொழில் நுட்பமின்மை
D) வளங்களைத் திறமையாக பயன்படுத்துதல்

10.கீழ்க்கண்டவற்றில் எது பணத்தின் பணியை குறிப்பதில்லை?

A) பரிமாற்றக் கருவி

B) மதிப்பின் அளவுகோல்

C) எதிர்கால செலுத்துகைக்கானநிலைமதிப்பு

D) ஒன்றுபடுத்துவதற்கான கருவி

11 உற்பத்திக் காரணிகள் (பட்டியல்A) மற்றும் உற்பத்திக்கான ஊதியத்தையும் (பட்டியல் B) பொருத்துக.

| பட்டியல A | பட்டியல் B |
|---|---|
| a.நிலம் | 1. இலபாம் |
| b.உழைப்பு | 2. வட்டி |
| c.மூலதனம் | 3. கூலி |
| d. அமைப்பு | 4. வாடகை |

குறியீடுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 2 | 1 |
| B. | 3 | 1 | 2 | 4 |
| C. | 3 | 2 | 4 | 3 |
| D. | 4 | 2 | 4 | 1 |

12.இவற்றில் எது மூலதனத்தின் வடிவமட அல்ல?

A) பருமப்பொருள் மூலதனம்
B) பணமமூலதனம்
C) இயற்கை மூலதனம்
D) மனித மூலதனம்

13.இதில் தவறான கூற்றைக் கூறுக

A) சமூகமும் சமுதாயமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது

B) சமூகத்தின் நோக்கம் பொதுநலம்

C) சமூகம் பல குழுக்களின் தொகுதி - ஒன்றுக்கொன்று தொடர்புடையது

D) சமூகம் என்பது மனிதர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட வாழ்வதற்கான முறையை எதிர்பார்த்தல்

14. கிராம பஞ்சாயத்தின் பணிகளில் வராத ஒன்று எது?

A) கிராமங்களில் கிணறு வெட்டுதல்

B) கிராமங்களில் உள்ள விளையாட்டு

C) மைதானங்களை கவனித்தல்

C) கிராமங்களில் சாலைகள் அமைத்தல்

D) கிராமங்களில் மின்சார உற்பத்தியைப் பெருக்குதல்

15.தலா வருமானம் என்பது

A) ஒரு நாட்டில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிலையைக் குறிப்பது

B) ஒரு நாட்டில் உள்ள பணக்காரர்களின்

வாழ்க்கைத்தரம்

C) ஒரு நாட்டில் ஏழ்மையில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலை

D) நாட்டில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரம்

16.ICAR இன் விரிவாக்கம் என்ன?

A) வேளாண் பகுதிக்கான இந்திய குழு

B) வேளாண் ஆராய்ச்சிக்கான இந்திய குழுமம்

C) வேளாண் ஆராய்ச்சிக்கான இந்திய குழு

D) வேளாண் பகுதிக்கான இந்திய குழுமம்

17. "அளிப்பு விதி" என்பது எந்த இரண்டிற்கான நேரடித் தொடர்பை விளக்கும்?

A) பண்டத்திற்கான விலைவும் அளிப்பின் அளவிற்கும்

B) பண்டத்திற்கான விலையும் அதன் தரத்தையும்

C) விலையில் ஏற்படும் ஏற்றம் மற்றும் பண்டத்திற்கான தரம்

D) விலையிறக்கமும் பண்டத்திற்கான தரமும்

18. விலையானது சமநிலை விலையை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கும் போது, சமநிலை விலையை அடைய தேவையும் அளிப்பும் செயல் புரிகின்றன.

A) விலை சமநிலை

B) அளிப்பு சமநிலை

C) அங்காடி சமநிலை

D) தேவை சமநிலை

19. இந்திய ரூபாயின் தனிப்பட்ட சின்னமானது இதன் இரண்டின் தொகுப்புகள் ஆகும்.

A) தேவநாகரி 'Ra' மற்றும் ஆங்கில எழுத்தின் 'R'

B) தேவநாகரி ‘Ra’ மற்றும் ரோம எழுத்தின் ‘R’

C) இந்தி எழுத்தில் ‘Ra’ மற்றம் ரோம எழுத்தின் ‘R’

D) இந்தி எழுத்தின் ‘Ra’ மற்றும் ஆங்கிலஎழுத்தின் ‘R’

Padasalai